
# திராவிடத்தால் வாழ்கிறோம்

817

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## வெறுப்பின் ஊற்று பா.ஜ.க.!

இந்தியாவில் பதிவாகும் வெறுப்புப் பேச்சுக்கள் தொடர்பாக, ஆய்வு நடத்தி ஒவ்வொரு ஆண்டும் அறிக்கை வெளியிட்டு வருகிறது 'இந்தியா ஹேட் லேப்'. 2024-ஆம் ஆண்டுக்கான வெறுப்புப் பேச்சுப் பட்டியலில், நாட்டிலேயே முதலிடத்தில் இருப்பவர் உத்தரப் பிரதேச முதல்வரான ஆதித்யநாத். கடந்த ஓராண்டில் மட்டும் 86 வெறுப்புப் பேச்சுகளை அவர் பேசியிருப்பதாக, இந்த ஆய்வறிக்கை கூறுகிறது. சராசரியாக ஒவ்வொரு நான்கு நாட்களுக்கும் ஒரு வெறுப்புப் பேச்சையாவது அவர் பேசிவிடுகிறார்.

அவை அனைத்துமே சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக இருக்கின்றன. குறிப்பாக, மகாராஷ்டிரா, ஜார்கண்ட் மாநில சட்டமன்றத் தேர்தல்களில், பா.ஜ.க.வின் நட்சத்திரப் பேச்சாளராக சென்றபோதே, இவர் இத்தகைய வெறுப்புப் பேச்சுக்களை அதிகம் பேசியுள்ளார்.

பிரதமர் மோடி 67 வெறுப்புப் பேச்சுக்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். 58 வெறுப்புப் பேச்சுக்களுடன் உள்துறை அமைச்சர் அமித் ஷா மூன்றாவது இடத்தில் உள்ளார். முதல் 10 இடங்களிலும் பா.ஜ.க.வினர்தான் உள்ளனர். 2024-ஆம் ஆண்டில் மொத்தம், 1,165 வெறுப்புப் பேச்சுக்கள் பொதுவெளியில் பேசப்பட்டுள்ளன. அதில் பாரதிய ஜனதா கட்சியினரால் மட்டுமே 462 வெறுப்புப் பேச்சுக்கள் பேசப்பட்டுள்ளன. 2023-ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் இது 352% அதிகம் என்கிறது 'இந்தியா ஹேட் லேப்'.

வெறுப்புப் பேச்சுக்கள் ஒன்றையே, தேர்தல் அரசியலுக்கான மூலதனமாகக் கொண்ட கட்சியாக பா.ஜ.க. உருவாகிவிட்டது என சமூக வலைத்தளப் பக்கங்களில், இந்த ஆய்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

## ஃப்ளாஷ்பேக்



## பாசறையில் பெற்ற பயிற்சி!



ரா.கார்த்திக்

28.09.2012 அன்று சிவகங்கை மாவட்டத்தில், கழக இளைஞர் அணி சார்பில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றவர்களைப் பாராட்டி வாழ்த்தினார். அப்போது பயிற்சி பெற்றவன் என்கிற முறையில், அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– ரா.கார்த்திக்,**
**மாணவர் அணி நகர அமைப்பாளர்,**
**மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### உறுதியான கொள்கைப் பிடிப்பு!

1969-ஆம் ஆண்டு, கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் முதன்முறையாக டெல்லி சென்று பிரதமரையும், ஒன்றிய அமைச்சர்களையும் சந்தித்தார். அங்கு, செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், 'ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் உள்ள அதிகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்றும் இந்தித் திணிப்பை, கழகம் என்றும் எதிர்க்கும்' என்றும் உறுதியாகத் தெரிவித்தார். 'டெல்லியில் கலைஞரின் செய்தியாளர் சந்திப்பு விபரீதமாகும்' எனச் சிலர் விமர்சித்த நிலையில், கழகத்தின் குழப்பமற்ற உறுதியான கொள்கைப் பிடிப்பு அரசியல் தெளிவினைக் கொண்டுள்ளது எனப் பத்திரிகைகள் எழுதின.



ஓவியம் : ரவி பேலட்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்!

**தமிழ்.கா.அமுதரசன்**

1

**புதிய தொடர்**

**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!**

ஓர் அரசாணை, ஒடுக்கப்பட்ட சமூகத்தின் தலைமுறையை மாற்றக்கூடியது என அறிந்தவர்கள், நம் தலைவர்கள். **'சமூக நீதித் திட்டங்கள் தீட்டப்படும் ஒவ்வொரு நாளும் நான் வாழ்கிறேன்'** என்றார் பேரறிஞர் அண்ணா. அதை அண்ணாவின் பெயரிலேயே நிகழ்த்திக் காட்டினார் கலைஞர். அண்ணா, கலைஞரின் வழியில், இன்று சமூக நீதியை உறுதிசெய்து கொண்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் நம் தளபதி.

ஆட்சி அதிகாரத்தால் மட்டுமல்ல, ஆட்சி அமைப்பதற்கு முன்பே சமூகப் பொருளாதார மாற்றங்களுக்காக சட்டமன்றத்திலும் நீதிமன்றங்களிலும் குரல் கொடுத்த இயக்கம் நம் இயக்கம். 75 ஆண்டுகால வரலாறு நெடுகிலும் நீண்ட சட்டப் போராட்டங்களை, நமது கழகம் நடத்தி இருக்கிறது. கழகத்தின் சட்டப் போராட்டங்களே, அன்றைய ஆட்சியாளர்களை வழிநடத்தின.

ஆனால், அதை நிகழ்த்துவதற்குப் பின்னால் இருந்து இயங்கிய கழகத்தின் நுட்பமான தலைமைத்துவத்தை அறிந்துகொள்வது, இன்று மலர்ந்துள்ள சமூக நீதி மலரின் வேர்களை அறிந்து கொள்வதற்கு ஒப்பானது.

### 'செல்லப்பிள்ளை' சட்டத்துறை

கழகத்தின் வழக்கறிஞர் அணி ஒரு வழக்கினைக் கையில் எடுத்தால், அதில் வெற்றி காணாமல் திரும்பியதில்லை என்கிற வரலாறு கொண்டது. ஆட்சியில் இருந்தாலும், இல்லை என்றாலும், கலைஞர் சட்டத்துறையினரைத் தனது செல்லப் பிள்ளை போல பார்த்துக் கொள்வார். அந்தச் செல்லப் பிள்ளைக்கு சமூக நீதி அரசியலைப் பார்த்துப் பார்த்து ஊட்டுவார். கழகத்தின் செல்லப்பிள்ளையான சட்டத்துறையும் நீதிமன்றக் களங்களில் பசிகொண்ட வேங்கை போல களமாடி வெற்றியைக் கொண்டு வருவார்கள். அப்படி தலைவரின் வழிகாட்டலில் வென்ற வழக்குகள் நூறாயிரம். நம் கழகத்தின் சட்டப் பள்ளித் தலைமை ஆசிரியராக வழிகாட்டியவர் கலைஞர்.

> **கழகத்தின் வழக்கறிஞர் அணி ஒரு வழக்கினைக் கையில் எடுத்தால், அதில் வெற்றி காணாமல் திரும்பியதில்லை என்கிற வரலாறு கொண்டது**

### வழக்கு நிதி தாரீர்

'மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி', 'இரு மொழிக் கொள்கை','எல்லோருக்கும் எல்லாம்' என்கிறது நமது சமூக நீதி. ஆனால், இவற்றைச் சாதிக்க வேண்டும் எனில், போராட்டம் இல்லாமல் சாத்தியமில்லை என்பதுதான் கடந்த கால வரலாறு. கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஆட்சி அதிகாரத்துக்கு வரும் நாள் வரை, எண்ணற்ற அளவில் திட்டமிட்டு சதிவழக்குகள் புனையப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதிலும் பல வழக்குகளில் கழகத்தினர் சிறைக் கொட்டடிகளில், அல்லலுற்று மாண்டுள்ளனர். சிறைப் போராட்டங்களுக்காகவே மக்களிடம் துண்டேந்தி, 'வழக்கு நிதி தாரீர்' என அரசியல்படுத்தியுள்ளது.

'இரு மொழிக் கொள்கைக்கான போராட்டம்', 'விலைவாசி உயர்வுப் போராட்டம்', 'சட்ட நகல் எரிப்புப் போராட்டம்', 'டால்மியா புரம் பெயர் மாற்றப் போராட்டம்' எனக் கழகத்தின் அழிக்கமுடியாத வரலாற்றுக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான வழக்குகள். அந்த வழக்குகளில் இருந்து மீள்வதற்கான சட்டப் போராட்டம் என கழகத்தின் ரத்தச் சுவடுகளும் கணக்கற்றவை.

### கலைஞரின் போராட்டம்

13 வயதில் திருவாரூர் பள்ளிக்கூடத்தில் 'இந்த சிறுவனைச் சேர்க்க முடியாது' என்று ஆசிரியர்கள் சொன்ன போது, ஒரு போராட்டம் நடத்தினார் கலைஞர். 'என்னைச் சேர்க்கவில்லை எனில், இதோ எதிரில் இருக்கும் குளத்தில் குதித்து விடுவேன்' என்று அன்று தொடங்கிய போராட்டம் தனது இறுதிக்காலத்தில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பக்கத்தில் தனக்கும் ஒரு இடம் வேண்டும் என்பதற்காக சட்டப் போராட்டம் அவர் பெயரால் நடைபெற்றது. இந்த இரண்டுக்கும் இடையில் தலைவர் கலைஞரின் பெயர் சொல்லும், நூற்றுக்கணக்கான போராட்டங்களைத் தொடும் முயற்சிதான் இந்தத் தொடர்.

'எஸ்மா', 'டெஸ்மா' என கொடூர சட்டங்களின்போது அரசு ஊழியர்களுக்கு அரண், மதமாற்றத் தடைச் சட்டம் வந்தபோது சிறுபான்மையினருக்கு அரண் என சமூகத் தாக்கம் கொண்ட வழக்குகளில் நாமாகவே நீதிமன்றத்தின் படிகளை ஏறி இருக்கிறோம்.

கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களின் உழைப்பாலும் வியர்வையாலும் கட்டப்பட்டது அண்ணா அறிவாலயம். அன்று பாதி கட்டடம் எழுப்பப்பட்ட நிலையில், கட்டட அனுமதியை ரத்து செய்தார்கள், அநீதி ஆட்சியாளர்கள். நீதிமன்றம் சென்று, தடையை நீக்கி அறிவாலயம் எழுப்பப்பட்டது எப்படி? அதற்கும் ஒரு நெருக்கடி வந்தபோது அவற்றை வழக்கறிஞர் அணி கட்டிக் காப்பாற்றியது எப்படி?

69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கான சட்டப் போராட்டம் நாம் இல்லாமல் நடந்திருக்காது. மருத்துவப் படிப்பில் அனைத்திந்திய ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவிகித ஒதுக்கீட்டை உறுதி செய்தது கழகம்தான். 'சமச்சீர் கல்வி', 'அண்ணா நூற்றாண்டு நூலகம், 'மக்கள் நலப் பணியாளர்கள்' என நாம் வென்ற வழக்குகளின் பட்டியல் நீளமானது.

அந்தச் சட்டப் போராட்டங்களை இரத்தமும் சதையுமாக வாசிப்பதில், இந்தத் தொடர் புதிய அனுபவத்தைத் தரும். கடந்த கால உயிர்ப்புமிக்கப் போராட்டங்களை அறிந்து கொள்வதன் மூலம், வரும் காலத்தில் துடிப்பு மிக்க அணிகளாக உயர இந்தத் தொடர் துணை நிற்கும்.

...தொடரும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131